380

உ

சிவமயம்.

ஸ்ரீமுருகக்கடவுள்துணை.

# சேற்றூர் சமஸ்தானம்

தேவதானம்

ஸ்ரீஅம்மையப்பர், திருமலைக்கொழுந்தீசர்,

நஞ்சாடை தவிர்த்தவர், ஆளுடை

நாதராகிய

## சேவகத்தேவர் பதிகமும் ::

## தவம்பெற்றநாயகி பதிகமும் ::

## திருக்கண்ணீசர் பதிகமும் ::

## அழகியநாயகி பதிகமும் ::

## எக்கலாதேவி பதிகமும் ::

அடங்கியுள்ளன.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS 19 JAN 1926

இவை

சேற்றூர் சமஸ்தானாதிபதி

மகா-ா-ா-ஸ்ரீ மாட்சிமை தங்கிய

மகாராஜா சேவகப்பாண்டியத்தேவர் அவர்கள்

கட்டளையின்படி

கல்லல் ஸ்ரீமணிவாசக சரணாலய சுவாமிகளால்

இயற்றப்பெற்று

திரிசிரபுரம் பிஷப் ஹீபர் காலேஜ் தலைமைத் தமிழ்ப் பண்டிதர்

திரு. ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்களாற்

பரிசோதிக்கப்பெற்று

ஷை சமஸ்தானாதிபதி அவர்கள் சமுகத்தில்

அரங்கேற்றப்பட்டன.

*Registered*] [*Copy-right.*

Printed by Jegam & Co., Dodson Press, Teppakulam, Trichinopoly.—1925

உ

சிவமயம்.

# சிறப்புப் பாயிரங்கள்

திருச்சிராப்பள்ளி

பிஷப் ஹீபர் காலேஜ், தலைமைத் தமிழ்ப் பண்டிதர்

உயரிய திரு.

## ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள்

இயற்றியவை.

சேற்றூரென் றினியவளஞ் சாற்றூரிற் சேவகப்பாண்
டியமன் னென்றும்
போற்றாருங் குழவிமதி யணிசடையா ளுடையார்தீப்
பொதுவ னாகும்
ஏற்றார்தி தவம்பெற்ற பிராட்டிதிருக் கண்ணாகு
கியவ ளின்னல்
பாற்றாரு மின்புதவு மெக்கலா தேவியிவர்
பைம்பொற் றூட்கே.

எஞ்சாத வினிமையுட னெஞ்சார்பைந் தமிழ்வளரு
மியற்செஞ் சொல்லால்
அஞ்சாரும் பதிகங்க ளஞ்சார வணிந்தனனு
லமருஞ் செல்வன்
பஞ்சாரு மடியுமைசெவ் வேள்குரவ ரொருநால்வர்ப்
பணிந்தெந் நாளும்
துஞ்சாது பரவிவழி படுமன்பின் றாயவுளன்
றுகளொன் றில்லான்

மின்போலும் பொருளாதி வேட்கையற விடுத்துயர்ந்த
துறவின் மேலோன்
மன்போலு முயர்சைவந் தமிழுடனே வளர்த்தருளு
மாண்பின் மிக்கோன்
பொன்போலு மெனக்கினிய வன்பாளன் மணிநீறு
புனையுஞ் சீராற்
றன்போலு முயர்மணிவா சகசரணா லயனெனுமா
தவன்றான் மாதோ.

உ

சிவமயம்.

ஸ்ரீமுருகன் துணை.

சேற்றூர் சமஸ்தான வித்துவான்

பா. அப்பாவுக்கவிராயரவர்கள்

இயற்றியது.

அறுசீரடியாசிரிய விருத்தம்.

பண்டுபய பதந்தந்தாள் சேவகத் தேவர்க்குநற்ற
பம்பெற் றூட்கும்
வண்டுபய மதுவருந்தும் பொழிற் சேறைமற்றையதெய்
வங்க ளுக்கும்
மிண்டுபய னுறமணிவாசக சரணாலயன் பதிகம்
விளம்பக் கம்பன்
கண்டுபயந் தேனென்றான் வாரியுண்டான் கும்பனதி
கரச மென்றே.

---

பழங்கோட்டை உபாத்தியாயர்

பிர்ம்மஸ்ரீ லெ. பூவநாதையரவர்கள்

இயற்றியது.

அறுசீரடி யாசிரிய விருத்தம்.

மன்னிலங்கு சேறையுறை யிறையிறைவி யின்னவரின்
மலர்த்தாட் கன்பாய்ப்
பொன்னிலங்கு வாழுமவர் கண்டுசிரந் துளக்கியுடல்
புளகம் பொங்கத்
தென்னிலங்கு தமிழினியல் சிறக்கவைத்து நற்பதிகஞ்
செப்பி னானல்
இன்னிலங்கு சொன்மணி வாசகசரணாலய வெதியா
மிணையற் றோனே.

## சேற்றூர் சேதுபதி மறவர் ஸ்கூல் தமிழ்ப் பண்டிதர்

## கி. அபிஷேக சுந்தரங்கரையாளர்

### இயற்றியவை.

092:417 N26

சீர்கொண்ட சோழன்மரபினன் சேறைத் திருவனெனுந்
தார்கொண்ட சேவகப் பாண்டியவேள் வந்தனம்புரியும்
பேர்கொண்ட வாளுடையார் தவம்பெற்ற பிராட்டியுடன்
ஏர்கொண்ட தேவிதிருக் கண்ணரென்னு மிறையுடனே. (க)

விரும்புமனை யெக்கலாதேவியா மிவர்மேற் பதிகங்
கரும்பினினிய மொழியாற் புகன்று கனிந்துதந்த
இரும்பணைசூழ் கல்விமா நகர்வாழெங்க ளேந்தலுயர்
பெருந்தவமா முனிசீர் வியந்தெங்ஙனம் பேசுவனே. (உ)

அணிவாசகச முதனூற் படைமன்ன ரன்புடனே
பணிவாசகச மொழியொடு போற்றும் பரமகுணன்
தணிவாசகனு முயர்சைவ நாளுந் தழைக்கவரு
மணிவாசக சரணாலய னென்னும் வரோதயனே. (ங)

முற்றும். சுபம்.



உ

சிவமயம்.

சேறைமாநகரம்

# ஸ்ரீ எக்கலா தேவியம்பாண் மீது

பாடிய

## தனிச் செய்யுட்கள்.

அறுசீரடியாசிரியவிருத்தம்.

திருவளருஞ் சேறைநகர் தனைப்புரக்க வெழுந்தருளுஞ்
　　செல்வி தேவர்
உருவளரு முடிசூடும் பெரும்பதத்தி கலியுகத்துக்
　　கொருத்தி மேலாம்
மருவளருந் திருமேனி வடிவழகி முக்குலத்தோர்
　　வணங்கி யேத்துந்
தருவளருஞ் செழுங்கரத்தி யெக்கலா தேவியடி
　　சார்ந்து வாழ்வாம். (க)

நீர்பூத்த நிலவளஞ்சேர் சேறைநக ராதிபனும்
நெறிசே ரெங்கள்
பார்பூத்த புயவழகன் சேவகப் பாண்டிய
வளவன் பரவமிக்க
ஏர்பூத்த வருளுதவி யன்னோற்கு மனைவளனு
மிசையு நல்குந்
தார்பூத்த கனதனத்தி எக்கலா தேவியடி
சார்ந்து வாழ்வாம். (உ)

பணிமலருங் கங்கணமார் மலர்க்கரத்தி யிமயமலைப்
பாவை சேறை
யணியிறையைக் குடிகடமைக் கருணையொடு புரந்தருளு
மம்மை வந்தோர்
பிணியொருவி நலமளிக்கும் பெற்றியா ருமைமாது
பிறங்கி வாழுந்
தணிமலருங் கிருபைவிழி யெக்கலா தேவியடி
சார்ந்து வாழ்வாம். (௩)

முற்றும். சுபம்.

மணிவாசக சரணாலயன்,
கல்லல்.

உ

சிவமயம்.

ஸ்ரீமுருகன் றுணை.

சேற்றூர் சமஸ்தானம் தேவதானம்

ஸ்ரீ அம்மையப்பர் திருமலைக்கொழுந்தீசர் நஞ்சாடை தவிர்த்தவர்

ஆளுடைநாதராகிய

# சேவகத்தேவர் பதிகம்.

காப்பு—வெண்பா.

தேவர்கட்குத் தேவனுயர் சேறைத்தே வத்தானச்
சேவகத்தே வர்பதிகஞ் செப்பவே—மேவும்
விளாவடிவி நாயகனுர் மென்பாதம் போற்றி
யுளாயடியே னுற்றே னெளி.

ஆசிரிய விருத்தம்.

தேனுடைத் தோடுமது காலடுத் தேகிவயல்
சேரநற்சாலி சமுகே
சீதளப் பாகுகனல் வாழையுற் றேகுதெனை
தேமினிப்பான கனிசார்
வானடுத் தாடுசினை மாமரத் தோடுபல
வாயநற்றேவ தருவார்
வாகுறச் சேருபொழில் சூழ்வுறக் கோயில்கொளு
மாமதிச்சோதி முடியோய்
கானுடைத் தூயகுழல் பார்வதித் தாய்தழுவு
காதலப்பே ரொளியுளாய்
காமனைப் போயொழிய வேவிழித் தாயகில
காரணச் சேயமணியே
சீனியைப் போலமொழி சேறையுற் ருருமிறை
தேடுநற்பூதி யுருவே
சேவுகைத் தேறுமுய ராளுடைத் தேவகில
சேவகத்தேவ விறையே (க)

ஆடரப் பூணியொடு தோல்பொடிப் பூசியொளி
ராதிமெய்ச்சோதி யுருவே
ஆலமொய்த் தாருகள மேனிநற் சீர்பவள
மானவைப்பான முதலே
தோடிறச் சாடுவிழி மாதுநற் போகமது
தோய்வுறப் பாவுமுளமார்
தூயநற் றேவிமலை மேனைபெற் றுருமொரு
தோகையைச் சூடுமணியே
காடடுத் தாடியுறு பீடுடைத் தேவவெதிர்
காணநட்பாகி வருவாய்
காலனைச் சாடிவரு மாமுனிக்கே யருள்செய்
காரணப் பாலவிழியாய்
தேடமெய்ப் பானபொருள் சேறையுற் றுருமிறை
தேடுநற் பூதியுருவே
சேவுகைத் தேறுமுய ராளுடைத் தேவகில
சேவகத்தேவ விறையே. (உ)

பாரதப் போரிலொரு தேருகைத் தேகடவு
பாவெழிற் பூவைவணனே
பாதமுற் றேதொழவு மேவரத் தாலருள்செய்
பாரினுக்கோர் முதலவா
நாரதப் பேர்முனிவ னோதிடப் பூமிசைய
நாளினுற் றேயருணையே
நானிலக் காவல்புரி மாவிறைத் தீரமது
நாடியற் றேயருளுவோய்
சீரடித் தாமரையி லேயுறப் பேய்மனது
சேருதற் கேகிருபைதா
தேவருக் காயமுத மீயவுற் றேயருளு
தேவநற் கோலவுருவே
தீரமுற் றேதிகழு சேறையுற் றுருமிறை
தேடுநற் பூதிமணியே
சேவுகைத் தேறுமுய ராளுடைத் தேவகில
சேவகத்தேவ விறையே. (௩)

கோலமெய்த் தாய்வடிவ மாகியற் றேகுருவே
கூவிடப்பா லருளியே
கூரமைச் சாகியடி மேவிடப் பேரருள்செய்
கூடலிற் றேவமணியே
பாலினுக் கேயழுத சேயினுக் காயுததி
பாலளித் தாளுமிறைவா
பாதமுற் றேபெரிய வாழ்விலுற் றேயமரு
பாகமெற் கேயருளுவாய்
ஞாலமுற் றோர்மையொடு நாடுவர்க் கேகிருபை
நாளுமிற் பாகவமர்வாய்
நாதசற் றுகிலுமு ணமமற் போடுபுகல்
ஞானமுற் றேறவருள்வாய்
சீலமுற் றேதிகழு சேறையுற் றுருமிறை
தேடுமெய்ப் பூதிமணியே
சேவுகைத் தேறுமுய ராளுடைத் தேவகில
சேவகத்தேவ விறையே. (௪)

மீதலத் தோருமுயர் பாதலத் தோருமுனே
மேவிடற் கேகருதிடார்
வீணிலுற் றேநரகி லாழ்வதற் காயவர்கள்
வேறுபொய்ப் பாதையுறுவார்
பாதலத் தூடுருவு மூலமுற் றுருகிரி
பாரமுற் றேறவடலார்
பாசமுற் றுடுமொரு ராவணற் கேயுறுதி
பாகமுற் றேயருளினோய்
வேதமெய்த் தேதடவு பாதமுற் றேதினமு
மேவிடற் கேகிருபைதா
வேலனுக் கானமுக வீரனுக் கேயினிமை
மேவுநற் றுதையரசே
சீதளச் சீலமொடு சேறையுற் றுருமிறை
தேடுமெய்ப் பூதிமணியே
சேவுகைத் தேறுமுய ராளுடைத் தேவகில
சேவகத்தேவ விறையே. (௫)

காரகிற் றாபமுறு காசறைச் சேரணிய
கார்குழற் சோதியழகார்
காதலிற் பேர்பெரிய மாதுவட் டானமுலே
காமியத் தாய்தவமுளாள்
தாரணிக் காதியனை சீருறத் தோண்மருவு
தாதைநிற் பாதமளியாய்
தாபமற் றேதிகழு மாதவர்க் கேயினிய
சாதநற் போகமருள்வாய்
சூரனைத் தோண்முறிய வோடவிட் டேசமர்செய்
சூரனைக் காணுமமலா
சூதமொய்த் தேகனிகள் தேறல்விட் டேயெழில்செய்
சூழ்பணைக் கோயிலுடையாய்
சீரணிப் பேரினெடு சேறையுற் ருருமிறை
தேடுமெய்ப் பூதிமணியே
சேவுகைத் தேறுமுய ராளுடைத் தேவகில
சேவகத்தேவ விறையே. (கூ)

மாகமுற் ருர்மருத மீதினிற் சேர்கிளிகள்
வாய்மறைப் பாடலழகாய்
வாரமுற் றேதியெதிர் பூவையைச் சாடியுறு
மாவளப்பேர் செறுவிலார்
பூகமொய்த் தேயமரர் நாடுபுக் கேயிலகு
போகமிக் கேதிகழ்வுரு
பூசலற் றேகுடிகள் வாழ்வுபெற் றேயுயரு
பூவினிற் கோயிலுடையாய்
நாகருற் றேகுடிகொ ணீளறப் பேர்மலேயி
னுடியற் றேதவமிகா
நாயகிக் காயருள்செய் மால்விடைப் பேரழக
நாதநிற் பாதமருள்வாய்
சேகரத் தோடினிய சேறையுற் ருருமிறை
தேடுமெய்ப் பூதிமணியே
சேவுகைத் தேறுமுய ராளுடைத் தேவகில
சேவகத்தேவ விறையே. (எ)

நாதமுற் றூர்துடிகொள் சோதியுற் றூர்கரநன்
றுதவெற் கேயருள்செயாய்
நானிலத் தேகொடிய மாதரிற் போயுழலு
நானிளைத் தேமெலியவோ
வேதனுக் கோர்தலையை யாதியிற் போயரிய
வேகமுற் றேநினைகுவோய்
மேனிலத்தார் துதிசெய் பாதமுற் றேதிகழு
மேவிநற் போதமருளாய்
தானதத் தாதனன தானமுற் றேயினிய
தாளமொத் தேநடனமே
தானிழைத் தேயுலகு காணநிற் பாயுனது
தாள்துதித் தேனிருமலா
சீதளச் சிலமொடு சேறையுற் றூருமிறை
தேடுமெய்ப் பூதிமணியே
சேவுகைத் தேறுமுய ராளுடைத் தேவகில
சேவகத்தேவ விறையே. (அ)

ஆரணத் தாலுமுய ராகமத் தாலுமெம
தாதிநிற் காணலெளிதோ
வாருனைத் தேடுபவ ராருனைக் காணுபவ
ராருனைப் பாடுபவரே
காரணத் தாலுமுறு காரியத் தாலுமெழில்
காணுதற் கேமுடியுமால்
காதலுற் றேயுனது பாதமுற் றோதவரு
காமமுற் றோரறிவரே
வாரணத் தானுமலர் மாமறைக் கோனுமலை
வாரிதித் தேவுமறியா
மாமணிச் சோதிமுடி நாதவெற் கேகவலை
மாறிடப் பேறருளுவாய்
சீரணத் தானிலகு சேறையுற் றூருமிறை
தேடுமெய்ப் பூதிமணியே
சேவுகைத் தேறுமுய ராளுடைத் தேவகில
சேவகத்தேவ விறையே. (கூ)

மாசிரித்தே யெழில்செய் போதமுற் றேயுனது
மான்மிகுத் தேயடியரா
மாதவத் தோர்குழுவி லேசரித் தேயடியின்
வாழ்வதற் கேயருள்செயாய்
தேசுதட் பார்மதிய மோடுவெப் பார்வனிகள்
சேரவைத் தேவிழியெனுச்
சீருடைத் தேயொளிசெய் மாமுகத் தாயுனது
சேவடிக் கீழருள்வையே
வாசியைத் தான்வசம தாகவைத் தேயுலவு
மாமதிப் பேரறிவுளார்
வாழநட்பா யருள்வை யேழையைப் பாரெனது
மாலினைத் தீரமலனே
தேசமுற் ருரமரு சேறையுற் ருருமிறை
தேடுமெய்ப் பூதிமணியே
சேவுகைத் தேறுமுய ராளுடைத் தேவகில
சேவகத்தேவ விறையே. (கo)

செந்திருவும் வெண்கமல மதின்மேவு தேவியுந்
தினமரங் காநடஞ்செய்
சேறைமணி மாமுகப் பரண்மனையின் மேவிவாழ்
சேவகப் பாண்டியமன்னன்
கொந்தலரு மாலையணி மகுடாதி பதியரசு
கோடாத செங்கோலுநற்
குணமுடைய மனைமக்க ணீடூழி நீடூழி
குலவியே வாழ்கவாழ்க
விந்தைவளர் புயமறவர் குலமாதி நற்குடிகள்
வெற்றிபெறு சேறைவாழ்க
மேதினியின் முத்தமிழு முயர்சைவ சமயமும்
விரிந்துலகி ளுளும்வாழ்க
சந்தமுறு தேவதா னக்கோயின் மேவிவளர்
தருமம்மை யப்பர்வாழ்க
தாய்தவம் பெற்றவளும் மும்மாரி பொழிமுகிற்
ருரணியும் வாழ்கமாதோ. (கக)

முற்றும். சுபம்.

உ

சிவமயம்.

ஸ்ரீ முருகன்றுணை.

சேற்றூர்சமஸ்தானம் தேவதானம்

# ஸ்ரீதவம்பெற்றநாயகி பதிகம்.

காப்பு—வெண்பா.

ஏராருந் தென்சேறை யின்றேவ தானம்வளர்
தாராருந் தோளி தவம்பெற்ருள்—சீராருஞ்
செந்தா மரைப்பதத்திற் செப்புங் கவிக்கருளுந்
தந்தா வளத்தோன் சரண்.

ஆசிரிய விருத்தம்.

தனென்றருங் கருமாவி னஞ்செறிந் தழுமாலை
திண்புயந் திகழ்வாகவே
சிங்கமும் பிணையாகு மங்களம் பொலிவீர
சிங்கமெங் கணையாளுவோன்
இன்றருங் கனிவான நன்சொலன் பரராச
ரென்றும்வந் தடிமேவவே
இம்பரும் புகழ்மேவு மும்பரும் புகழ்கீர்த்தி
யெங்குமொன்றிட வாழுவோன்
வன்றருஞ் சினவேலை யங்கரங் கொளுமேன்மை
வண்பெறுங் கொடையாளனே
வந்திடும் புலவோர்கள் தந்தையென் றிடமேவி
வஞ்சரஞ் சிடநாடுவோன்
மன்பெரும் பதிசேறை மன்பதந் தொழவாரு
மஞ்சிணைந் திடுசோதியார்
மன்றலங் குழலோவி யம்புணைந் தெழின்மேவி
மன்றவம் பெறுதேவியே. (க)

இந்தொடுங் கமழ்வான கொன்றையுந் திகழ்கூவி
ளம்படுஞ் சடைநாதனார்
இன்புறுஞ் சிவைநாக கங்கணம் பொலியாயி
யெண்கரஞ் செறிவாண்மினே
சந்தனந் திமிர்வான மென்றனம் பொலிமாலை
தந்திடும் படர்சோதியாய்
சங்கிரங் கிடுவாவி பங்கயந் திகழ்வான
தண்பெரும் பதிமேவுவோய்
கொந்துறுந் தருமேவி நின்றிடும் பொழிலேறு
கொண்டறந் திடுமாரியால்
கொண்டிடும் புனல்வேலி தங்கிடும் பணைமீது
கும்புறுங் கனலாருமோர்
வந்தமர்ந் திடுசேறை மன்பதந் தொழவாரு
மஞ்சினைந் திடுசோதியார்
மன்றலங் குழலோவி யம்புனைந் தெழின்மேவி
மன்றவம் பெறுதேவியே. (உ)

கஞ்சமொன் றிடுவேதர் கொண்டலென் றிடுநீதர்
கண்டுகொண் டிடுவோமெனு
கம்பறந் தெழிலான மண்புகுந் தறிபாது
கன்றிநெஞ் சயர்வாகியே
அஞ்சிநின் றடியோமை நன்றடைந் திடவாள்வை
யம்பரம் பரனேயெனு
அன்றுவந் தெதிராகி யின்புறும் பரமேச
ரங்கரம் புனைசோதியே
சஞ்சலம் பலவேக வென்றுநின் பதமேவு
தண்குணந் தனைநீதராய்
தந்தியுங் கனிவான கந்தனுங் கொளஞான
தண்டனந் தனையீகுவாய்
வஞ்சரஞ் சிடுசேறை மன்பதந் தொழவாரு
மஞ்சினைந் திடுசோதியார்
மன்றலங் குழலோவி யப்புனைந் தெழின்மேவி
மன்றவம் பெறுதேவியே. (௩)

கண்டெனுங் கனிவான வின்சொலுந் திருவேறு
கண்டருங் கிருபாவுமே
கந்தமொன் றிடுபாத பங்கயந் தனதோடு
கண்டிடும் படிநீவராய்
அண்டருந் தொழநாடி வந்திடும் பதிமேவி
யங்குறுங் கருணைநிதே
அஞ்சுகந் திகழ்பூவை விஞ்சுமந் திரமோதி
யன்புடன் பணியாதியே
தெண்டனென் றடியார்க ளண்டிநின் றிடவாழ்வு
செங்கையொன் றிடவீகுவோய்
செஞ்சிலம் பதினேசை விண்டலம் புகவேறு
செஞ்சரண் டனிலாள்வையே
மண்டலம் புகழ்சேறை மன்பதந் தொழவாரு
மஞ்சினைந் திடுசோதியார்
மன்றலங் குழலோவி யம்புனைந் தெழின்மேவி
மன்றவம் பெறுதேவியே. (ச)

இந்திரன் கனிவோடு வந்துநின் றறைகூவி
யின்புறும் பதமேவுவான்
எண்டருந் தவராசர் சந்ததம் பணிமேவி
யெங்கணுந் தவநாடுவார்
அந்தியும் பகலாக வண்டுதொண் டர்களாடி
யன்பொடுந் துதிபேசுவார்
அம்பரந் தனிலாரு மும்பரெங் கணுமாக
வங்குநின் றலர்தூவுவார்
பந்திபந் தியதாக மந்திரந் தனையோது
பண்பரன் பொடுசூழுவார்
பங்கிருந் திடுதேவர் மங்களந் திகழ்வோடு
பங்கமர்ந் தவைநாடுவாய்
வந்திலங் கிடுசேறை மன்பதந் தொழவாரு
மஞ்சினைந் திடுசோதியார்
மன்றலங் குழலோவி யம்புனைந் தெழின்மேவி
மன்றவம் பெறுதேவியே. (ரு)

அஞ்சனஞ் செறிவான கண்கனிந் திடவாதி
யங்கணன் றனைமேவுவாய்
அஞ்சிலங் கிடுவேத கந்தரந் திகழாயி
யந்தரந் தனிலாருவாய்
மஞ்சனந் தனையாடி யின்பொடும் புனைமாலை
வங்கமொன் றிடுகாசுநேர்
வண்டரும் பலவார முந்தனஞ் செறிவாகு
மங்கையெங் களையாளுவாய்
இஞ்சியொன் றிடுமேக மங்குநின் றருண்மாரி
யெங்கணும் பிரவாகமா
யிங்குறும் பணைமீது தங்கியின் புறுசாலி
யின்பலம் பெரிதாகுமோர்
வஞ்சரஞ் சிடுசேறை மன்பதந் தொழவாரு
மஞ்சினைந் திடுசோதியார்
மன்றலங் குழலோவி யம்புனைந் தெழின்மேவி
மன்றவம் பெறுதேவியே. (சு)

விந்தைபங் கயமேவு மங்கைதந் திடலான
வென்றியுந் திருவாதியாம்
விஞ்சுமிந் திரபோக சம்பிரமந் தனின்மேவி
விண்டலம் புகழேறவே
சிந்தையின் களியான சிந்துவின் புறமூழ்கு
திண்புயன் கலைவாணனே
தென்பரங் கிரிமேவு கந்தனின் புறுதாதை
செஞ்சிவன் கழனுடுவோன்
பந்தைவென் றெழிலேறு தண்டனந் திகழ்மாதர்
பண்பொடுங் கிழிநாடுமோர்
பம்பிடுங் கனரூப னெங்களின் றுரையான
பந்தனன் பினிலீடுளான்
வந்திலங் கிடுசேறை மன்பதந் தொழவாரு
மஞ்சினைந் திடுசோதியார்
மன்றலங் குழலோவி யம்புனைந் தெழின்மேவி
மன்றவம் பெறுதேவியே. (எ)

நஞ்சணிந் திடுநீல கண்டரம் பரநாதர்
நங்கள்சங் கரதேவனர்
நன்றிலங் கிடுபாத மொன்றியின் புறலான
நந்தவம் புரிவேனெனு
அஞ்செனுஞ் செறிவான மந்திரந் தனிலாரு
மங்கணன் கனிவோடுமே
அண்டமின் புறமேய தென்புறந் தருமாச
லந்தனின் பரவாயெனு
விஞ்சைகொண் டெழிலாக வந்தமர்ந் தறநீதி
விண்டுயர்ந் திடநாடியே
மென்பதந் திகழ்வாக வின்றவம் புரிபோது
மின்பரன் புயமேவினய்
வஞ்சரஞ் சிடுசேறை மன்பதந் தொழவாரு
மஞ்சினைந் திடுசோதியார்
மன்றலங் குழலோவி யம்புனைந் தெழின்மேவி
மன்றவம் பெறுதேவியே. (அ)

கங்குலும் பகலாக வந்துவந் தடியார்கள்
கஞ்சம்வென் றிடுபாதமேற்
கந்தமொன் றலர்மாரி சிந்திநின் றினியார்கள்
கண்டமந் திரமோதியே
மங்கிடும் பவமேக வென்றிரந் திடநீடு
மங்கலந் தனையீவையால்
வஞ்சிரஞ் சிதரூபி பஞ்சினைந் திடுபாத
மங்கையெங் களையாளுவாய்
பொங்கிடும் புகழேறி யெங்கணுஞ் செலுமேன்மை
பொன்பெறும் புயவீரனேர்
புங்கதுங் கணியாரு செங்கரன் கொடையாதி
புந்திகொண் டிடுமாரனும்
வங்கமிஞ் சிடுசேறை மன்பதந் தொழவாரு
மஞ்சினைந் திடுசோதியார்
மன்றலங் குழலோவி யம்புனைந் தெழின்மேவி
மன்றவம் பெறுதேவியே. (கூ)

மந்திகுந் திடுசோலை நின்றிழிந் திடுதேறல்
வந்தடைந் தெழிலாகுமோர்
வண்பெறுஞ் செறுமீதி லெங்கணும் பயிரேற
வண்டலம் பிடுவாவிமேல்
அந்தரஞ் செலுமோதி மம்புகுந் தினிதான
வம்புயந் தனிலேறியே
அன்பொடும் பெடையோடு தங்கிடும் புகழேறு
மந்தவொண் பணைசூழவே
விந்தைகொண் டுயர்வான நின்பெருந் தளிமீது
மின்படுந் தவிசேறியே
வென்றியொன் றிடுசூல மென்கரங் கொடுவாழு
மிஞ்சுபைங் கதிர்மேனியாய்
வந்திலங் கிடுசேறை மன்பதந் தொழவாரு
மஞ்சினைந் திடுசோதியார்
மன்றலங் குழலோவி யம்புனைந் தெழின்மேவி
மன்றவம் பெறுதேவியே. (௧0)

செங்கமல மகளுமுயர் வெண்கமல மகளுமுறு
செல்வஞ் சிறந்துவாழும்
சேறைநக ராதிபன் பரிதிவழி மன்னவன்
சேவகப் பாண்டியராசன்
மங்கலந் திகழ்புயமு மணிமகுட மும்பெரிய
மனுநெறிச் செங்கோலுநன்
மனைமக்க ளாதியா முயரரசி லக்கணமும்
வழிவழியி னீடுவாழ்க
பொங்குபுகழ் சேறைநகர் வாழ்கவங் கமர்குடிகள்
புகழ்பெற்று நாளும்வாழ்க
பூரணக் கலைகணிறை யாளுடை நாதரும்
புகழ்தேவ தானம்வாழ்க
தங்குமெழில் கொண்டுவள ரம்பாள்தவம் பெற்ற
தாயடியும் நாளும்வாழ்க
தாரணியு மதியிரவி யாவினமு முகிலுமலை
தனிவளமும் வாழ்கமாதோ. (௧௧)

முற்றும். சுபம்.

உ

சிவமயம்.

ஸ்ரீ முருகன் றுணை.

சேறைமாநகரம்

# ஸ்ரீ திருக்கண்ணீசர் பதிகம்.

காப்பு—வெண்பா.

சீராருஞ் சேறை திகழ்திருக்கண் ணீசுரர்க்கு
நாராரு மோர்பதிகம் நன்கியற்றத்—தாராருஞ்
செம்பவள மேனியொளிர் சித்திக் கணேசனடி
நம்பியே கைதொழுதே னுன்.

ஆசிரிய விருத்தம்.

திருவின்ற னுதுபதி மறைதந்த வேதர்துதி
சிவசங்க ராபசுபதீ
செகமின்பொ டேபரவு பதமொன்றியே திகழு
திறமின்று நீயருளுவாய்
மருவெங்கு மேகமழு முயர்கொன்றை பாதிமதி
மருவுஞ் சடாதரவரா
வழிநின்ற மாலடியர் பரவும் பராபரசெய்
வளமொன்று மாகருணையாய்
அருவும்பி னுனவரு வுருவுந்த னுருவ
வழகும்ப ராவவருள்வாய்
அணிதங்கு மேர்கிருபை விழியென்ற னுகுலமு
மகலுந் தயாவுதவுமே
வருகின்ற சேறையுறு மிறையென்று மேதுதிசெய்
மலர்தங்கு பாதவழகா
மலரும் பணமகுட வரவங்கொ ளாதியெழில்
வளருங்க ணீசமணியே. (க)

க்மலம்பு காமதுவு ணளியெங்கு மேபரவு
கமழ்கின்ற வோடையதினோர்
கரைதங்கு சோலைசெறி முகிலெங்கு மேமுதிரு
கருநின்று மேகுமுறியே
சமரம்பு போலமழை பொழியுந்த ணீர்பெருகு
சதிரென்று வார்பழனமே
தருதங்கு வாழைகனல் கமுகும்ப லாவினொடு
தழைகின்ற சாலிமிகவே
நமரங்கண் மாமகிழ்வி னொடுகொண்டு போகமிக
நணுகும்பொ ருதிகொடுமே
நலிவின்றி வாழ்வுபெறு வளமொன்றி யேதிகழு
நயமென்று மேயடையுமோர்
மமர்வென்ற சேறையுறு மிறையென்று மேதுதிசெய்
மலர்தங்கு பாதவிறையே
மலரும் பணுமகுட வரவங்கொ ளாதியெழில்
வளருங்க ணீசமணியே. (உ)

குரவம்ப ராவுகுழ லழகொன்று போரழகி
குயிலென்ற மாமொழிமினாள்
குணமொன்ற வேதமுவு புயதுங்க னேயமரர்
குறைவென்ற வாதிமுதலே
இரவென்ற காலமதி னுலவும்பொலா வவுண
ரிறைபொன்ற வேயருளுவோய்
எளியன்ற னுவுதவு தமிழின்ப மேசெவியி
லிறைகொண்டு நேரவருவாய்
அரபுங்க வாமறையி லிலகுஞ் சிவாகைலை
யமரும் பராபரவையா
அணியொன்று மால்விடையி லிவருஞ்சு காவலக
மருளுந்த காவுடையவா
வரமிஞ்சு சேறையுறு மிறையென்று மேதுதிசெய்
மலர்தங்கு பாதவழகா
மலரும் பணுமகுட வரவங்கொ ளாதியெழில்
வளருங்க ணீசமணியே. (௩)

வலிமிஞ்சு மாதிரிபுர மும்வென்ற மாநகைய
மவுனங்கொ ளாதிமுனிவோர்
வடமொன்றி யேபணிய வருளங்கு தானுதவு
மகதுங்க மோனகுருவே
நலிகின்ற தோர்மலமு மொழிகின்ற வாறருள
நணியிங்கு நீவருவையோ
நகுபங்க மாதலைய தொடையென்பு சூடுபவ
நமமங்களா கரவரா
பலிகொண்ட தோர்வடிவ புலிகண்ட மாநடன
பவம்வென்ற பாதவழகா
பருவங்க ளாகிவரு பவரின்ப மேபுகுது
பலனின்று தானுதவுவோய்
மலிவங்க சேறையுறு மிறையென்று மேதுதிசெய்
மலர்தங்கு பாதவிறையே
மலரும்ப ணுமகுட வரவங்கொ ளாதியெழிற்
வளருங்க ணீசமணியே. (௪)

சிவசப்பு வேகுழக வருமின்ப மாவடிவ
திரையொன்று மாநதியமால்
செறிகின்ற வேழமன முருகுங்க லாவளர்வு
திகழூந்த யாவருளுவாய்
அவமென்றுமே யொழிய நவமொன்றி யேதிகழ
வருளின்று சோதிவடிவே
அறுகும்பன் மாமலரு மலரும்பொன் மாமணிசெ
யணிதங்கு நீண்மகுடனே
தவநின்ற வீரர்பலர் குழுவென்று மேகெழுமு
தளியொன்றி வாழுமரசே
தமியன்சொன் மாதமிழி னியல்கண்டு நீகிருபை
தரவென்று தான்வருவையோ
மவல்பொங்கு சேறையுறு மிறையென்று மேதுதிசெய்
மலர்தங்கு பாதவிறையே
மலரும்ப ணுமகுட வரவங்கொ ளாதியெழில்
வளருங்க ணீசமணியே. (௫)

தன்தந்த தானவென நடமொன்று மாபரத
சதிநின்ற மாதரொருசார்
தகுதிந்தி தாவெனுரை முழவொன்றி யேயொலிசெய்
தகுசெங்கை யாளரொருசார்
இனமொன்று மேழுசுர லயமண்டியே யுரைசெய்
யிசைகண்ட தீரரொருசார்
எழில்பொங்கு வீணையொடு நிறைகின்ற கீதமதை
யிசைசங்கை யாளரொருசார்
கனமென்று மேகுமுறு தவிலொன்று நாகசுர
கரைகண்ட பேர்களொருசார்
கையிலொன்று மாகடச லதரங்க மோடுபல
கவினென்று பாடலொருசார்
மனமுண்ட சேறையுறு மிறையென்று மேதுதிசெய்
மலர்தங்கு பாதவழகா
மலரும்ப ணுமகுட வரவங்கொ ளாதியெழில்
வளருங்க ணீசமணியே. (சு)

மறைசந்த மோடுரைசெய் தணிதங்க வேசநிதி
மருவந்த ணாளரொருசார்
வகைதங்கு மாகமந லுரையின்ப மாயருள்செய்
மதிமிஞ்சு சீலரொருசார்
நறைதங்கு மாலையணி திகழ்ழெங்க ளாசிரியர்
நலமொன்ற வேயருளுமேர்
நயமுண்ட மாதமிழின் மறையொன்று மாமுறைகள்
நனியொன்ற வோதலொருசார்
அறைகின்ற தானவுய ரெழின்மந்த்ர மாதிசொலி
யடியண்டி யார்வரொருசார்
அவம்வென்ற மாலடியர் துதிகொண்டுமே தொழவு
மணிபொங்கி யாருமொருசார்
மறைகண்ட சேறையுறு மிறையென்று மேதுதிசெய்
மலர்தங்கு பாதவழகா
மலரும்ப ணுமகுட வரவங்கொ ளாதியெழில்
வளருங்க ணீசமணியே. (எ)

கருவொன்றி யேயுழலு வினைபொன்ற வேகிருபை
கதிதங்க வேயருளுவாய்
கமழ்கின்ற நீபமணி முருகன்ற னாதுதி
கழலொன்று பாதவிறையே
குருவென்று மோர்பொழுது நகுருந்திலே யமரு
குணமிஞ்சு சோதியுருவே
குறிகொண்டு நாயடிய னறிவொன்றி ஞானமது
குறைவின்றி யேறவருளே
செருவென்ற மாரன்விடு கணைகொண்டு மான்மனது
சிதைகின்ற போதிலெதிர்வாய்
செயலொன்று மேழைபர மிலையுன்ற னாருள்செய்
திருநின்ற கோலவுருவே
மருநின்ற சேறையுறு மிறையென்று மேதுதிசெய்
மலர்தங்கு பாதவழகா
மலரும்ப ணுமகுட வரவங்கொ ளாதியெழில்
வளருங்க ணீசமணியே. (அ)

அடருங்க டாமிசையில் வருகின்ற காலனெதி
ரறிவொன்று தீரமுறவே
அருள்கொண்டு நான்மகிழ்வி னெடுவந்து பாதமதி
லடைகின்ற ஞானமருள்வாய்
இடரென்று மேயொழிய நடநின்ற பாதமதை
யெணியின்ப மாகவினிதே
இலகும்ப ராகிருபை தரவென்று நானடியி
லிசைகொண்டு மேவியுறுவேன்
படர்கொண்ட தேவர்பதி பெறவன்று வேலுதவு
பரையொன்று மேனியழகா
பழமொன்று மாபலவு முறைகின்ற வார்பழன
பதிதங்கு கோயிலுடையாய்
மடலொன்று சேறையுறு மிறையென்று மேதுதிசெய்
மலர்தங்கு பாதவழகா
மலரும்ப ணுமகுட வரவங்கொ ளாதியெழில்
வளருங்க ணீசமணியே. (கூ)

உனையன்றி வேறுபொருண் மனமொன்ற வேநினைவி
லுணர்கின்றி லேனறிகுவாய்
உமைகொங்கை யேதழுவி யுறைகின்ற சோதியுரு
வுளமொன்ற வேயருள்வையே
வினைவென்ற பேரறிஞர் தொழுகின்ற நீலகள
விதிவென்ற வானவடிவே
விரதங்க ளாதிகொடு நினையண்டு வோர்கள்துயர்
வெலவின்ப மேயருளுவோய்
அனையென்ற நீள்கருணை பொழிகின்ற வானமுகி
லதுவென்று நானறையவோ
அகாந்த ஞதுசெய லெனநின்று சீவர்களை
யருள்கின்ற ஞானமயனே
மனைதுன்று சேறையுறு மிறையென்று மேதுதிசெய்
மலர்தங்கு பாதவழகா
மலரும்ப ணுமகுட வரவங்கொ ளாதியெழில்
வளருங்க ணீசமணியே. (௧0)

சீர்பெருகு புகழ்மேவு சேறைநக ராதிபன்
சேவகப் பாண்டியதேவன்
திகழுமணி மகுடமொடு மநுநீதி யரசுபுரி
செங்கோலு மணிபுயமுநல்
லேர்பெருகு மனைமக்க ளாதியுயர் செல்வமு
மினியவிசை யுயருபேரும்
ஏற்றமொடு பல்லாண்டு பல்லாண்டு வாழ்கநல்
லெழிலுற்ற சேறைவாழ்க
தார்பெருகு வீரந் தழைத்துயரு மறவருந்
தங்குமுயர் குடிகள்வாழ்க
தகைமைமிகு கருநெல்லி வனமென்னு முயர்தலந்
தாமுந் தழைத்துவாழ்க
வார்பெருகு முலைவல்லி யழகம்மை நாயகன்
மன்திருக்கண் ணீசரும்
வாழ்க வென்றென்று முகில்பரிதி மதியாவினம்
மகிழ்விநெடு வாழ்கமாதோ. (௧௧)

முற்றும். சுபம்.

உ

சிவமயம்

ஸ்ரீ முருகன் றுணை.

சேறைமாநகரம்

# ஸ்ரீ அழகியநாயகி பதிகம்.

## காப்பு—வெண்பா.

தென்சேறை மன்னன் றிருக்கோயிற் பக்கம்வளர்
என்று யழகம்மை யின்பதத்திற்—கன்பாகப்
பாடுந் தமிழ்க்குப் பயனளிக்கு மன்பருளத்
தாடுங் கரிமுகவை யன்

## ஆசிரிய விருத்தம்.

செங்கமல முறைமாது வெண்கமல முறைமாது
சிந்தைமகிழ் வொடுநாளுமே
சென் றுகவ ரிகள்வீசி நின்றுமிரு புறமீது
செங்கைதொழு தினிதாருவார்
கொங்கைதிகழ் சசிதேவி வந்தடிவ ருடிகாதல்
கொண்டுபணி யினிதேசெய்வாள்
கொன்பெருகு மெழுமாதர் முந்தையுள மனுவோடு
கொந்தலர்க ளவைசூடுவார்
தங்குசுர நடமாதர் சங்கையுற விசையோடு
சந்தநட மினிதாடுவார்
தந்தியொடு வடிவேலர் வந்துமடி யுறவாகு
தன்றவிசி லினிதாருவாய்
மங்கையுன தருளேறு வென்றிபுனை யுயர்சேறை
மன்பரவ வளராதியாம்
மங்களம துறமேவி யின்பமுறு மெனதாவி
மங்கையழ கியதேவியே. (க)

கொந்தலரு மளியேறி யொன்றுகுழ னிறைசோதி
கொண்டமதி முகமேருரு
குஞ்சிமதி நுதலோடு வன்றனுசி னுறவாகி
டும்புருவ வெழில்கூர்மையார்
சிந்துநிக ரளிமே விடுங்கருணை விழியோடு
செப்பவள நகைவாயுமேர்
செங்காமு முயர்வான கும்பமுலை துடிநேரு
தென்றலிடை யுடைவாண்மினே
சந்தமுறு சுராதி யிந்திரனு மயனோடு
சங்குதரி கரனுதியோர்
சந்ததமு மலர்மாரி சிந்துமடி யதினோடு
சஞ்சலம தறநேருவாய்
வந்துனடி தொழுதேறு வென்றிபுனை யுயர்சேறை
மன்பரவ வளராதியாம்
மங்களம துறமேவி யின்பமுமுறு மெனதாவி
மங்கையழ கியதேவியே (உ)

அண்டர்பதி தனிலேறி நின்றதலை யசைவாகி
யங்குவளர் தருவோடுமே
யந்தமொட ளவளாவு கின்றபொழி லதின்மேவு
மம்பொன்மலர் தருதேறலை
கொண்டுவய னிறைமீன மொன்றுபுல வதுவேகு
கும்புசெறி தருநீடுமேர்
குஞ்சரமி னிதுலாவு கின்றமலை தருமாறு
குண்டுபடு குளமேவியே
யண்டிநிறை வதுவாகி யென்றும்விளை வுறுசாலி
யம்பொன்மலை யெனவேறுமே
யந்தவள மதைநாடி நன்றுநிகழ் தளிமீதி
லங்கணரி னெடுமேவுவாய்
மண்டியடி தொழுதேறு வென்றிபுனை யுயர்சேறை
மன்பரவ வளராதியாம்
மங்களம துறமேவி யின்பமுறு மெனதாவி
மங்யைழ கியதேவியே. (ங)

கங்குல்பக லறியாது நின்றுலவு சிவயோகர்
கங்கைமுத னதியாடியே
கண்டபல தலமேவி யொண்டியடி யுறுவோர்கள்
கன்றிவெயில் பனிமாரியால்
பொங்குதழ லதினூடு நின்றுதவ மதுநாடு
புங்கவர்கள் விரதாதியால்
புந்திமகிழ் வதினோடு வந்துநிறை வுறுசீலர்
புன்புலனை வசமாகவே
தங்கையுற வறிவோடு நின்றுணர்வி னிறைசோதி
தன்கனிவை யுணர்வோரொடே
சந்தமுறு சரியாதி கொண்டுவழி படுவோர்கள்
தங்கள்குழு வதின்வாழுவாய்
மங்கையுன தருளேறு வென்றிபுனை யுயர்சேறை
மன்பரவ வளராதியாம்
மங்களம துறமேவி யின்பமுறு மெனதாவி
மங்கையழ கியதேவியே. (௪)

பந்தியென நிறைபாளை கந்திதெனை யுயர்வாழை
பங்கிலுறு கனலாதியே
பண்பதுற வரணுக வந்தரம துறுவோர்கள்
பம்பிவிழி தனினுடுவார்
மந்திகுதி கொளுமாவி ளந்தளிர்கள் குயில்கோதி
வந்தினிய விசைபாடவே
வண்கொடிகள் செடியாதி தன்றலைக ளசைவாகி
மண்செறிய விழிவாருநீர்
சிந்திமகிழ் வுடனுரு மொண்கமல மலர்மீது
சிந்துமலர் தனைநாடினல்
செங்கையுற வினிதான தங்கமது புலவோர்கொள்
திண்செறிவு நிகராகுமே
வந்துனடி தொழுதேற வென்றிபுனை யுயர்சேறை
மன்பரவ வளராதியாம்
மங்களம துறமேவி யின்பமுறு மெனதாவி
மங்கையழ கியதேவியே (௫)

பஞ்சரம தனிலேறி யொன்றுகிளி வடிவான
பண்டிதரெ னருணகிரீ
பண்பினொடு மினிதான சந்தவிசை யதுபாடு
பந்தமதி லுறவாகியே
செஞ்சொன்மொழி யதுவாக வந்தபுக ழனுபூதி
திண்புயம தனிலாரவே
சிந்தைமகிழ் வொடுசூடு கந்தரெமை யினிதான
செம்பதும வடியாளுவோர்
விஞ்சியுயர் நடமாடு பைஞ்சிகியி லினிதேறி
விண்புவியி னிதுலாவுவோர்
வென்றிபுனை யயில்வேல ருந்திமடி மிசையார
மென்கரம தணையாயியே
மஞ்சிவரு மதில்சூழு வென்றிபுணை யுயர்சேறை
மன்பரவ வளராதியாம்
மங்களம துறமேவி யின்பமுறு மெனதாவி
மங்கையழ கியதேவியே. (சு)

கஞ்சிநகர் வளர்மாவி னண்டியொரு தவமேசெய்
கந்தமுறு மழகார்பினே
கம்பைநதி பிரவாக மங்குறவு மருகார்கை
கண்டுதழு விடவாதியே
பஞ்சிநிகர் குழைவோடு பந்துமுலை வளையாதி
பண்பி லுற வடுவாகவே
பங்கெதிரி லுறநாடி யின்பமொடு மிடமேவு
பைங்கதிரி னொளிமேனியாய்
செஞ்சரண மதைநாடி வந்துதின மதின்மேவு
திண்கருணை தனையீவையே
தென்பரவு மிசைபாடு வண்டுபடு மலர்மாலை
சிந்துமது நனைகார்குழால்
மஞ்சிவரு மதில்சூழு வென்றிபுனை யுயர்சேறை
மன்பரவ வளராதியாம்
மங்களம துறமேவி யின்பமுறு மெனதாவி
மங்கையழ கியதேவியே (எ)

கங்கைபர வுயர்காசி பொங்கருணை யவிநாசி
கஞ்சிதிலை மருதூரோடே
கண்டநல கரிகாவு நின்றபழ மலைநாகை
கம்பரவு கமலாபுரீ
பொங்குநதி வையைமேவு சங்கமுறு முயர்கூடல்
புந்திமகிழ் நெலைசோதியார்
பொன்புணரி யருகாரு துங்கபதி புனைகாவு
புங்கமுறு முயர்வானதோர்
துங்கமுறு பதியாதி தங்கியடி பணிவோர்கள்
துன்பமற வருளீகுவாய்
தொந்தமுறு வினைபோக வந்துனடி தனின்மேவி
சொந்தமதி தனையீவையே
மங்கையுன தருளேறு வென்றிபுனை யுயர்சேறை
மன்பரவ வளராதியாம்
மங்களம துறமேவி யின்பமுறு மெனதாவி
மங்கையழ கியதேவியே (அ)

பண்டை விகிரமசோழ னண்டிவரு பொழுதாதி
பண்புமொழி கொடுமேவியே
பங்கிலரண் மனைநீடு துங்கமுறு முயர்கோயில்
பைம்பொனணியுற மேன்மையாய்
அண்டர்துதி யதுபேச வுண்டுபணி யுனையாதி
யங்கணனை யினிதாகவே
அன்பினிறு விடவாழு மெங்களனை யபிராமி
யஞ்சிலமர் சுகரூபியே
தொண்டர்பலர் குழுவாகி வந்துநினை யினிதான
துன்றுதுதி தனையோதவே
சொந்தமென வவர்நாடு மன்பினிலை யதில்வாழ்வை
சுந்தரியெனமு தாகுவோய்
மண்டியடி தொழுதேறு வென்றிபுனை யுயர்சேறை
மன்பரவ வளராதியாம்
மங்களம துறமேவி யின்பமுறு மெனதாவி
மங்கையழகிய தேவியே. (சு)

ஒன்றுநின தருண்மேவி யண்டநினை வதுதேவி
யும்பர்பத மதுவேயலால்
உந்திமல ருறுவேத னந்தமுகில் வணன்வாழ்வி
லொன்றுபத மிவையாதியாய்
ஒன்றும்நினை வதிலேது பின்றையெலவை யெனினுதி
யொன்றுபதி யதுமேவவே
யுண்டுமன முளதோகொ லென்றுசொலி னலஞான
மொன்றவள ரடியாரொடே
யொன்றியவ ரடிமேவு புன்றுகளை யணியாக
வுண்டுடல மதினுரவே
யும்பர்புகழ் வுறநீவி யின்பமுற வரமீவை
யுன்பரம ததுதேர்வையால்
மன்றுவளர் புகழேறு வென்றிபுனை யுயர்சேறை
மன்பரவ வளராதியாம்
மங்களம துறமேவி யின்பமுறு மெனதாவி
மங்கையழ கியதேவியே. (௧0)

எண்டிசையி லேறுபுகழ் கொண்டுவளர் சேறைமன்
னெங்களிறை தீரவீரன்
இன்பமொடு வளர்சேவகப் பாண்டிய ராசனதி
யெழின்மகுட மொடுநீளுமோர்
கொண்டுதிகழ் செங்கோலு மவனரசு மனைமக்கள்
குலவியினி தேறிவாழ்க
கோடாத மனமுடைய மறவர்குல மாதிநற்
குடிகளென் றென்றும்வாழ்க
மண்டுபுகழ் சேறையும் மலையாறு நற்பழன
வளமேவி நாளும்வாழ்க
வளமுடைய முத்தமிழு முயர்சைவ சமயமும்
மங்களம தாகவாழ்க
அண்டர்துதி பெற்றுவளர் நந்திருக்கண் ணீசர்
அழகம்மை பாதம்வாழ்க
அகிலத்தின் மதியிரவி முகில்வான மாவினமும்
அருள்பெற்று வாழ்கமாதோ. (௧௧)

முற்றும். சுபம்.

உ

சிவமயம்.

எக்கலா தேவிசகாயம்.

# எக்கலாதேவி அம்பாள் பதிகம்.

காப்பு—வெண்பா.

தேனாருஞ் சோலைசெறி சேறைநகர் வாழுமுயர்
கானாருங் கூந்தற் கயற்கண்ணி—வானோரும்
போற்று மெக்கலாதேவி பொன்னடிக்குப் பாட்டுரைக்க
வூற்று மதவும்பலடி யோது.

ஆசிரிய விருத்தம்.

தத்தன தானதன தத்தன தானதன
தத்தன தான தனன

செப்பமார் மாமலரு ளூற்றுவாழ் வேதனருள்
திக்குலா மாத ரணிமேற்
றெற்குநேர் மால்வழுதி கொற்றநா டேயுமெழில்
கிட்டமார் சேறை நகர்வாழ்
ஒப்பிலா மாதுமலை பெற்றதோர் சோதிவடி
வுற்றமா தேவி யுமையே
உத்தியா னுடுவரை நத்தியே வாழ்வருளி
யொக்கவே வாழு மெழிலீ
தப்பிலா நீதிநெறி பற்றிவாழ் மாலரயர்
தக்கவாழ் வேற வருள்வாய்
சத்துவா ரூபியருண் மிக்கமா சூலியுயர்
தற்பரா தீத வடிவீ
எய்ப்பிலா வீரர்பலர் பற்றியே மேவிவள
ரிட்டமார் சேறை நகராம்
இக்குலா யாடுபதி புக்குலா யாருமெழி
லெக்கலா தேவி யுமையே. (க)

வட்டமா யானமதி யொத்ததோர் சோதிமுக
மட்டுவார் நீடு குழலீ
வற்றிடா தார்கருணை யுற்றமா நீலவிழி
வைப்பெனு வாரு மமுதே
சிட்டரா மாதிதவர் புக்குவாழ் சோதியடி
செப்பியே வாழ வருள்வாய்
செக்கர்வான் மேனியொளிர் நக்கனார் பாகமுறு
சிற்சுகா தீத முதல்வீ
மொட்டறு நாண்மலர்க ளிட்டுநா னேதினமு
மொய்த்துநே ரோத வருளே
முத்தரா மாலடியர் சித்தமீ தாருமெழின்
முற்றிடா மா முலைமினே
இட்டமாய் வீரர்பலர் நத்தியே மேவிவள
ரிச்சையார் சேறை நகராம்
இக்குலா யாடுபதி புக்குலா யாருமெழி
லெக்கலா தேவி யுமையே. (உ)

கைக்கடா மூறுகளி கொற்றமால் யானைமுக
கத்தனார் மேவு மடியாய்
கற்புளார் மாமனதி லுற்றுவா ழாறுமுகர்
கக்கமே லாரு மழகீ
மைக்கடா வேறிவரு துட்டமா காலன்வலி
வற்றியே யோட வருள்வாய்
வைக்கணார் மாமயிலி லுற்றிடா தேறுமதி
வைக்கவே நீ கிருபைதா
மெய்க்கடா தானநெறி யுற்றபேர் வீயவருள்
வெற்றியார் சோதி யுருவே
வெற்புநேர் மாமயிட னிற்றுவாழ் வேயொழிய
விட்டதோர் சூல முதல்வீ
எற்குநேர் வீரர்பல ருற்றுமே மேவிவள
ரிட்டமார் சேறை நகராம்
இக்குலா யாடுபதி புக்குலா யாருமொழி
லெக்கலா தேவி யுமையே. (ங)

பச்சைமா மேனிதிகழ் சத்திமா தேவியருள்
பற்றுவோ ராவி நிறைவே
பட்சமாய் நாடுபவ ரிச்சைபோல் வாழ்வருளு
பத்திமீ தாரு மிறைவீ
செச்சைமே லாருயுய னச்சுமோர் வேலுதவு
சித்து ரூபா னதனியே
சித்தியே நாடுபவர் முத்தியே நாடுபவர்
சித்தமே மேவி யமர்வோய்
விச்சையே நேடிமதி பற்றியே மேன்மையுற
வித்தகீ நீ கிருபைதா
வெற்றிசேர் மாமிசையி னுற்றுலா வாகிவரு
மெய்த்ததோர் சோதி வடிவே
இச்சையாய் வீரர்பல ருற்றுமே மேவிவள
ரிட்டமார் சேறை நகராம்
இக்குலா யாடுபதி புக்குலா யாருமெழி
லெக்கலா தேவி யுமையே. (௪)

கொத்துலா மாலைமுடி யைக்கொடே மால்வழுதி
கொற்றமார் நடா தனையே
குற்றமே போயகல வுற்றுமா நீளரசு
குத்தனு தாக வினிதே
நத்தியே யாளிறைவி யத்தனுர் தோண்மருவி
நச்சவே நா டுதவுவோய்
நத்தனுர் சோதரிக னத்ததோர் மாமுலைந
கத்தளே மா மறையுளாய்
பத்தியான் மேவியுனை நித்தமே யோதியடி
பற்றியே வாழ வருள்வாய்
பற்றுளார் தேடவெதி ருற்றுவாழ் வேயருளு
பட்சமார் சோதி வடிவே
எய்த்திடா வீரர்பல ருற்றுமே மேவிவள
ரிட்டமார் சேறை நகராம்
இக்குலா யாடுபதி புக்குலா யாருமெழி
லெக்கலா தேவி யுமையே. (௫)

எற்புமா மாலையணி கொற்றமான் மேவுகர
ரெற்கு வாழியு மிறையோர்
இட்டமார் பாதியுடல் பற்றவே தானருள
விச்சையாய் மேவு மிறைவி
பொற்புலா மாகவிறை யுற்றதோர் நீடுபழி
பொய்த்துவா னேற வருள்வோய்
புக்குநா னேதினமு நத்தியே வாழவருள்
புட்பமார் பாத வெழிலீ
அற்புளார் நீடுமன முற்றுமே கோயில் கொளு
மச்சியே வேத முதல்வீ
அக்கமா மாதிமணி வெற்றியார் நீறுபுனை
யத்தமே நீ யருளுவாய்
இற்பொலீ வீரர்பல ருற்றுமே மேவிவள
ரிட்டமார் சேறை நகராம்
இக்குலா யாடுபதி புக்குலா யாருமெழி
லெக்கலா தேவி யுமையே. (சு)

அட்டமா யோகமொடு மிட்டமாய் நாடுபொரு
ளத்தையே தான ருளுவோய்
அச்சமே போயகல வைச்சுவாழ் வேயுதவி
யற்புநா ணுக வுனுவாய்
விட்டுவோ டேயயனு மொட்டியே நேர்பரவு
வித்தகீ யாதி முதலே
மெத்தவே தான்மயலி லுற்றுநானே யுழல
விட்டிலா தேயெ னனையே
திட்டமாயே யடியை நத்திவீடே புகுது
சிற்சுகா தீத மருள்வாய்
செற்றமார் மால்விடையர் நத்துமேர் வார்குழலி
செப்பமார் பாத வழகீ
இட்டமாய் வீரர்பல ருற்றுமே மேவிவள
ரிச்சையார் சேறை நகராம்
இக்குலா யாடுபதி புக்குலா யாருமெழி
லெக்கலா தேவி யுமையே. (எ)

சித்திஞேடே விரவு சத்துமாய் மேவினிய
திட்பமார் சோதி வடிவே
செட்டியாய் மாமதுரை யற்றைநா ணீதியொடு
செற்றமோ டாரு மிறையோர்
நத்தியே மேவுமெழி லுத்தமீ மால்வலேஞு
னட்பொடே பேணு மரசீ
நற்சுகா தீதமெனு மற்புதா காரமுற
நச்சி நீயேய ருளுவாய்
பத்தியோடே பரவு சித்தமார் ஞானமய
பக்குவா தீத ருறவே
பற்றுவார் தீயவினே யற்றுவாழ் வாகவருள்
பட்சமா யேயு தவுவாய்
இத்தரா வீரர்பல ருற்றுமே மேவிவள
ரிச்சையார் சேறை நகராம்
இக்குலா யாடுபதி புக்குலா யாருமெழி
லெக்கலா தேவி யுமையே. (அ)

விக்ரமா சோழன்வரு மற்றைநாண் மாநகர
மிக்கதோர் மேன்மை யுறவான்
மெச்சமே ஞடுபுகழ் துற்றவே தானமைவு
வெற்றியா யேதிகழவே
கைக்கொடே தானிலகு பக்கமே யீசர்பதி
கட்டிவாழ் வாகி வளர்வாய்
கட்கமார் நீடுகர முற்றதோர் மாலிறைவர்
கற்பிஞு லாகி வழியே
தக்கதோர் மாமுடித ரித்துமே நீளரசு
தட்பமா யாளு மெழிலார்
சத்துவா ரூபமுள கொற்றவேல் வீரநிறை
சற்குணு யோக னணிசேர்
இக்குவோர் மேவுபுக ழுற்றதோர் மாலரய
ரிச்சையாய் வாழு நகராம்
இக்குலா யாடுபதி புக்குலா யாருமெழி
லெக்கலா தேவி யுமையே. (கூ)

176455

எட்டிவா னுருமுயர் வுற்றதோர் மாதரும
மிட்டமேர் நீடு மலையால்
எற்றியே யோடிவரு மிக்கதோர் மாநகரை
யெக்குநீ ரேறி வளமே
யொட்டியே நீடுகனல் வைத்ததோர் மாகதலி
யுற்றுலா யேறு தெனையோ
டொக்கவே யாருகமுகத் தொடே மாபலவு
மொப்பவே தான் வளர்வுரு
மட்டொடே நீர்நிறைவு புக்கதோர் மாகழனி
வைப்பெலா மாகி யழகாய்
வைத்ததோர் சாலிவிளை வுற்றுமே போகமிக
மட்டிலா மாரி நிறைவால்
இட்டமா யேகுடிக ளூற்றுவாழ்வே திகழு
மிச்சையார் சேறை நகராம்
இக்குலா யாடுபதி புக்குலா யாருமெழி
லெக்கலா தேவி யுமையே. (௧௦)

02:47 176

ஏர்பெருகு பரிதி மருமானிட்சு வாகுவழி
யெழில்வளவன் மர பிறைவனு
மெங்களிறை சேறைமன் சேவகப் பாண்டியனி
னிலகுமணி மகுட மவனுள்
சீர்பெருகு பேரரசு மனைமக்கள் செல்வமுஞ்
சேகரம தாக வாழ்க
சிலவிறை குடைநிழலி லுற்றுவளர் குடிகளுஞ்
செல்வமொடு நாளும் வாழ்க
தார்பெருகு மெம்மம்மை யப்பரொடு வாழுந்
தவம்பெற்ற தாயும் வாழ்க
தண்மதம் பொழிவெயி லுகந்தவனு மருமணற்
றந்திமா முகனும் வாழ்க
பார்பெருகு சேறையும் நந்திருக்கண் ணீசர்
பாகமழ கம்மை வாழ்க
பல்வளனும் வாழ்கநம் மெக்கலாதேவி பொற்
பாதமலர் வாழ்க மாதோ. (௧௧)

முற்றும் சுபம்.

கல்லல் ஸ்ரீமணிவாசக சரணாலய சுவாமிகள் இயற்றிய பிரபந்தங்கள்.

| | | ரூ. அ. பை. |
|---|---|---|
| 1. | ஸ்ரீமுருகக்கடவுள் சோடசப்பதிகப் பிரபந்தம் | விலை 1—0—0 |
| 2. | அன்னபூரணியம்மை அட்டப்பிரபந்தம் | ,, 0-12—0 |
| 3. | திருக்கருவைப் பதிகங்கள் | ,, 0—4—0 |
| 4. | ஸ்ரீமுருகக்கடவுள் விண்ணப்பக்கலிவெண்பா | ,, 0—2—0 |
| 5. | செந்தமிழ்நாட்டுச் சிறப்பு | ,, 0—1—0 |
| 6. | சேற்றூர்ப் பதிகங்கள் | ,, 0—4—0 |

இவை ஷை சுவாமிகளிடம் கிடைக்கும்.

---

திருச்சிராப்பள்ளி, பிஷப் ஹீபர் காலேஜ் தலைமைத் தமிழாசிரியர் பண்டிதர் ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள் இயற்றிய அரிய ஆராய்ச்சி நூல்கள்.

| | | ரூ. அ. பை |
|---|---|---|
| 1. | கபிலர் | விலை 1—4—0 |
| 2. | நக்கீரர் | ,, 0—8—0 |
| 3. | வேளிர் வரலாற்றின் ஆராய்ச்சி | ,, 0—3—0 |
| 4. | கள்ளர் சரித்திரம் (இது பொதுவாகத் தமிழ் மக்களின் வரலாற்றையும், சிறப்பாகக் கள்ளர் குலத்தாரின் வரலாற்றையும், தேச சரித்திரங்கள், கல் வெட்டுக்கள், பழந் தமிழ் நூல்கள் முதலியவற்றைக்கொண்டு விரிவாக ஆராய்ச்சிசெய்து எழுதப்பெற்றது. 350 பட்டப்பெயர்கள் இதன் இறுதியில் அகராதியாகக் காட்டப்பெற்றுள்ளன) | 1—0—0 |

அகத்தியர், சோழர் சரித்திரம், ஒட்டக்கூத்தரியற்றிய உலாக்கள் இவை விரைவில் வெளிவரும்.

இவை பண்டிதர் ந. மு. வே. நாட்டாரவர்களிடத்திலும், சென்னை, திருநெல்வேலி முதலிய இடங்களிலும் விலைக்குக் கிடைக்கும். வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.